# கடற்கரை கவியரங்கு– 660

## நாள்: 05-04-2026

# காதலின் மாட்சி!

கண்களை இமைதான் மூடிடுமோ காட்சிக்கு மனமோ தூதுவிட!
எண்ணத்தில் யாவுமே அரசாளும் இதயத்தில் இனிதாய்ப் பூபூக்க!
வண்ணமாய்க் கனவுகள் எழுந்துவிட, வாழ்க்கையது புரிந்திடுமோ!
திண்ணமாய் மனத்தில் பல ஓட்டம் தீட்டிடும்தானே புதிய ஒளி!

யார்தான் யாரை அறிந்திடுவார்?
எவர்தான் இவரெனக் கூறிடுவார்?
கண்கள் கனிவுடன் பேசிடுமோ!
காட்சியாய் மனத்தில் நிலைத்திடுமோ!

உள்ளத்துக்கு ஏது புறக்காட்சி?
ஊமையாய் நெஞ்சில் மனக் காட்சி!
ஊருக்கு ஒருவராய் இருந்திடுவோம்!
உள்ளத்தால் இணைந்து வாழ்ந்திருந்து,

எதனால் எதனை அடைவோமோ?
இன்பத்தின் சுவடுகள் தெரியாதோ!
உள்ளமே உண்மையைச் சொல்லிவிடு!
உறவுகள் தழைந்திட வேண்டாவோ?

எவர்தான் கண்டு மகிழ்ந்திடுவார்?
எதனால் நிறைந்து வாழ்ந்திடுவார்?
அதனை நாளும் தேடுவதாலே அவர்
அடைந்திடும் பயன் எதுவுண்டோ?

கனவே கனவே தொலைந்துவிடு!
காட்சியில் வாழ்வை நிலைக்கவிடு!
கண்களின் வழியே கதை சொல்லும்!
காதலே உயிர்களின் பிறப்பிடமாம்!

**- கவிஞர் கவிவளவன்.**
25-03-2026